OS 347/2021
வா.சா. 2 பிரின்ஸ் த/பெ போஸ்
நாள் 17.11.2025

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. வாதி போஸ் எனது தகப்பனார் என்றால் சரிதான். எனது அப்பாவுடன் பிறந்தவர்கள் கோபால், வடிவேலு மற்றும் ராமு ஆவார்கள். எனது அப்பாவும் அவருடன் பிறந்தவர்களும் சேர்ந்து பாக கூறு சீட்டு எழுதி கொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதன் பின்னிட்டு 03.01.2005ல் பாகப்பிரிவினை பத்திரம் எழுதி சார் பதிவாளர் அலுவலத்தில் பதிவு செய்து கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது அப்பாவின் கையொப்பம் பார்த்தால் சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியும். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என் அப்பாவுடையது தான். எனது அப்பா தனது பாகத்தை அரசாங்கத்திற்கு 04.04.2005ல் ரூ.75,000/-க்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் எனது அப்பா அரசாங்கத்திற்கு கிரையம் கொடுத்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். (அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) எனது உடன்பிறந்தவர்கள் ஜெயந்தி, ரேகா, சிவக்குமார், ஷில்பா ஆகியோர் ஆவார்கள்.

2. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த ஆவணத்தில் உள்ள புகைப்படமும் என்னுடையது தான். 4 முதல் 7 பிரதிவாதிகளின் அப்பாவிற்கு பாகமாக கிடைத்த சொத்தில் 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கு பாகமாக கிடைத்த சொத்தை 19.07.2017ல் நான் கிரையம் வாங்கிய பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்னிடம் காட்டப்படுகிறது என்றால் சரிதான். (அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) எனது அண்ணன் சிவக்குமார் என்பவரும் 4 முதல் 7 பிரதிவாதிகளின் அப்பாவிற்கு பாகமாக கிடைத்த சொத்தில் 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கு பாகமாக கிடைத்த சொத்தை 19.07.2017ல் சிவக்குமார் கிரையம் வாங்கிய பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்னிடம் காட்டப்படுகிறது என்றால் சரிதான். (அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) அவ்வாறு கிரையம் வாங்கப்பட்ட சொத்தின் சர்வே எண்.132/1A என்றால் சரிதான். எனது முதன்மை வாக்குமூலத்தில் வி.ஏ.ஓ. தன்னிச்சையாக கூட்டு பட்டாவாக மாற்றிவிட்டார் என்று வழக்கிற்காக சொல்லி இருக்கிறேன் என்றால் சரியல்ல.

3. பாகம் பிரிக்கப்பட்டது சம அளவில் சம மதிப்பில் இல்லை என்று எனது தகப்பனாருக்கு ஆதரவாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலம் பாகம் பிரிக்கப்பட்ட சொத்திற்கு எனது தகப்பனார் தவறான விவரங்கள் கூறி பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்திருப்பதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.